உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௬	பிரமோதூத, மார்கழி,	மலர் ௬,

குமர குருபர அடிகளும் அவர் நூல்களும்.

திரு. இ. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், தமிழாசிரியர், நாட்டுமொழிக் கல்லூரி, திருவையாறு.

இப்பொருள்பற்றி வரைந்த கட்டுரைதொடர்ந்து நந்தமிழ்ப் பொழிலின் கண் மிளிர்வுறுமைக்குப் * பேரறிஞராயினர் பெரிதும்பொறுக்கவென முன் வேண்டித் திருவாவடுதுறை யாதீனத்துப்பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களியற்றிய குமர குருபர சுவாமிகள் சரித்திரம் எனு நூலின்கண் காணப்படுவனவற்றுட் சில சுருங்க ஆய்ந்து முடிப்பன்.

இந்நூல் முன்னைக் குறித்த நூலைவிட 349 செய்யுள் கொண்ட ஒரு சிரிய நூலாம். பல்வகையணிகளும் சுவை ததும்பும் பாடல்களுமுடையனவென்பது படிப்பாருணர்வார்.

இதனுள் அடிகள் வரலாற்றுக்கு முரணானவெனப் பதிப்பாசிரியரால் சில செய்யுள் தள்ளப்பட்டுமுள்ளன. ஆயினும் உள்ளன கொண்டு தெள்ளத்தெளிதல் அறிஞர் கடனுமன்றோ!

---

* இக்குறை எம்பாலதாகலின், இவ்வேண்டுகோளை எமதாகக் கொள்க. வே.

ஈண்டு, இந்நூலுள் சிறப்புற வாயத்தகுவ, நமது ஓதாதுணர்ந்த பரமனார், திருவாவடுதுறையை யண்மியத்திருத்தளியிலஞ்ஞான்று ஞான குரவரா யெழுந்தருளியிருந்த நமச்சிவாய தேசிகர் திருவடிபோற்றி யன்னாரையே யருட் குரவனெரக் கொண்டு வாழ்ந்தனரா? தருமபுரத்துறை பெருங்குரவனும் மாசிலாமணியினதருள் பற்றி அறத்துறைமல்கச் செய்தனரா? காசித் துண்டிவிநாயகர்பதிகம் இவர் பாடினதாமோ? பண்டாரமும் மணிக்கோவையெனுக் தத்துவப் பெருநூல்பற்றி இப்பிள்ளையவர்கள் தாம் பாடிய நூலுள் கூறுவன பொருந்துமா? பிள்ளைப் பெருமாளையங்காரை நம் அடிகளார் வாதில்வென்று சமய நிலைநாட்டின துண்மையா? என்பனவும் பிறவுமாம். முன்னும் பின்னுஞ் சில விரியினும் விரியும்.

இவர் நூல் தொடங்குகையில் பாண்டிநாட்டு வளமும் வைகுண்ட நகரவளமுங் கூறினர். இவை, காப்பியப் பண்பினைக் காட்டாநிற்கும். இந்நூலிற் கூறப்படும் அடிகளார் கைலையிற் றுதித்தனர் எனப் பிறர் சாற்றியும், தாமுதித்த வூரின்கண் கோயில் கொண்டெழுந்தருளிய பெருமானார்க்குக் கலம்பகம் ஒன்றியாத்தனரெனப் பகர்ந்துமுளார். அங்ஙனமாகவும், இப்பிள்ளையவர்கள் வைகுண்ட நகரமெனச் சாற்றுவாராயினர், யாது கருதியோ வெனின், கைலையெனச் சாற்றுதல் சிறுவழக்கிற்றாயும் வைகுண்டமெனப் பகர்தல் பெருவழக்கிற் றாயுமிருத்தற்பற்றிப் போலும். வைணவர்கள் சீரியது எனப் புகறல் வைகுண்டத்தையும், சைவர்கள் நேரியதென வறைதல் கைலையையும் என்பது புராணவாயிலா னினிதுணரக் கிடக்கும். திருநெய்த்தானம் எனும் பெயர் புலப்படாதபடி விண்டு 'சமயத்தவர்,' தில்லைத்தானம் என வழங்கிவருவதும் காணத்தக்கதே யாம்.

இவ்விரு பெயருற்ற பேரூரின்கண் பாண்டி வேளாண் குடியினரென்று சிறப்பிக்கப்பெற்றோர்பால் அடிகள் தோன்றினமை தவத்தாலென்பது புலப்படுகின்றதேயன்றி, இருமுதுகுரவர் பெயர் குறிக்கப்பட்டிலது. சண்முக சிகாமணிக் கவிராயர் சிவகாமியம்மையென்பது கர்ன பரம்பரைச் செய்தியாக வந்துளது. பாயிரத்திலுமிது பகரப்படவில்லை. சரித்திர சார

பஞ்சகத்துமட்டுங் காணப்படுகின்றது, பிள்ளையவர்களும் கர்ன பரம்பரையைக் கொண்டன்றிப் பாடினதாகவுந் தெரியவில்லை.

மேலும், தவத்திற்கியைந்த புதல்வர், ஐந்தெனும் வயது வரையும் பேசாமையை எனையர் புலப்படுப்பவும்,

29 ஓராண்டு பெருமகிழ்ச்சி யுற்றவிரு முதுகுரவர்
ஈராண்டு முதலாகப் பேசுவரென் றெதிர்பார்த்தும்
பாராண்டு வருமுளையார் பேசாத பண்புணர்ந்து
நாராண்டு மகிழ்மனத்துத் துன்பமே நனிசுமப்பார்

30 பூங்கையா லெடுத்தணைத்துப் புல்லின ருச்சிமோந்து
நாங்கையா வினையாற்றி நன்றிதுபெற் றனமென்று
திங்கையா யாதுகலை தேர்ந்தார்கள் யாவரையும்
மூங்கையாக் கிடுவாரை மூங்கையா ரெனத்தெளிந்தார்

எனப் புலப்படுக்காது விடுத்தனர். ஈராண்டு முதலாக எனக் கூறியவதனல் வயதெல்லை 3, 4, 5, 6, 7, 8, 9, 10 வரையுங் கொள்ளலாம் போலும். பேசற்குரிய பருவம் ஐந்தற்குமேலில்லை யென்பதறிஞர் துணிபு. மூன்றுவயதிற் பாடிய சம்பந்தர் வரலாறுமிது குறித்துரைக் கிடக்குமன்றோ! ஈராண்டு முதலாக என்பதையே ஓராதரவாக்கொண்டு, கொழும்பு பொன் இராம நாதன் துரையவர்கள், குமர குருபரர் பத்து வயதளவும் பேசா திருந்தனர் என்று தம்மகராதியின்கண் வாளாவுரைத்தனர். மழலைப்பருவ முடிந்து ஐந்தாம் வயதில் கலைப்பயிற்சி செய்விக்கப் பெறுங்காலம் வரவும், அடிகள் பேசாதிருந்தனர். அது குறித்துத் தாய் தந்தையர் வருந்தினரென்றலே சாலச் சிறப்புடைத்தாம் என்பது தோன்றுகின்றது. அதன் பின்னர், அடிகளொடு தாய் தந்தையார் செந்தூரையடைந்து கந்தனை வந்தித்தமையும், அடிகள் அப்பரமனருளால் ஊமை தீர்ந்தமையும் புலப்படுத்தினர்.

44 இலையமில் குமர வேண்முன் வணங்குவார்க் கென்றுங்
கிலைபடு பகைசற் றேனு மிலைபடு பிணிநி ரப்பு [துன்ப
மிலையளற் றுழன்று வீழ்த லிலைபல பவத்துச் சார்பு
மிலையென விலைவி பூதி யெடுத்தெடுத் துதவல் கண்டார்.

45 இன்னபல் வளனு நோக்கி யெம்பிரான் திருமுன் [சென்று
பொன்னடி வணங்கிப் போற்றிப் புண்ணிய முதல்வா [விந்தப்
பன்னரு மதலை தானின் னடைக்கலம் பார்த்துக் [கொள்ளென்
றுன்னருந் தம்மூ ருற்று ருறுதவம் புரிந்தின் றேமே.

46 ஈன்றவ ரொழித்த பின்னை யிசைத்திடா மதலை யாருக்
கான்றநல் லறிவு செந்தூ ரண்ணலா ரருளிற் றோன்றச்
சான்றவர் மதிக்குந் தெய்வச் சண்முக விலாசம் வைகித்
தோன்றலா ருருவ முள்ளே தோன்றக்கண் டிருந்தா [ரன்றே.

என வனப்புப் பலவாய்ப்பப் பாடியிருத்தல் பெரிதும் போற்றத் தக்கதே. ஆயினும் உறுதவம் புரிந்தின்ற பெரியார், மூங்கையே யாய பிள்ளையை அறுமுகவற் கடைக்கலமாத் தந்துதமதூர்ப் புக்கனரெனல் யாது கருதியோ? மகவன் பிலாமையோ? எனச் சில கேள்விகளெழும்பலாம். அக்கேள்விகட்கு விடையிறுத் தலுமின்றியமையாததே. உறுதவமுஞன்று பெற்றவர் உலகிற்கு நாணினராயின் ஊருக்குத் திரும்பிச் சென்றுறைந்து வாழாது கானிற்கேகி வீடடைதற்கு முயன்றிருக்கலாம். அன்றியிறை யவன் மாட்டு நிறையன்புடையவராயின் அச்செந்தூரான்றிரு முன்னர் சேயோடு வதிந்திருக்கலாம், இவ்விரண்டுமின்றித் தம் மூர்ப்புக்கனரெனச் சாற்றுதல் அன்னவர் வன்கண்மையைப் புலப்படுக்குமேயன்றி பிள்ளைமாட் டன்புடைமையைத் தேற்று விக்கமாட்டாது. காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சென்பது உலக வழக்கன்றோ! குசேலர், புத்தர் முதலியினர் தம்மக்கள் மீதிட்ட காதலைமாற்ற முடியாது திகைத்தொருவாறு தேறின ரெனின் இவர்கள்கதி யெங்ஙனமாகும்? "நின்னடைக்கலம் பார்த் துக்கொள்" என்றலமைவதாயிருக்க, இங்ஙனம் ஆய்தலொண்ணு மோவெனின், அங்ஙனங் கைவரப்பெற்ற வுறுதியுடையவராயின் தம்மூரினின்றே யிதுகருதி நோற்றிருக்கலாம். எல்லாம்வல்ல அருளுருவன் ஆண்டுப்போய்த் தீர்ப்பது மருமையுடைத்தாகாது.

ஆகலின் ஒன்றுமென்க. சந்நிதி சிறப்புடையது எனக்கருதி வந்திது செய்தனரெனின் செய்தது நன்றேயாம். யாற்றின் கணீ ரோடினும் இறங்கி நீரருந்தப் பலதுறைகளுண்டு, அது போல இறைவன் திருவருள் கைவரப்பெறும் இடமெனக்கொண்டு போதலும் ஆகுமன்றே? பின்னர், அடிகள் சண்முகவிலாசம் எய்தி இறைவனருள் கைவரப் பெற்றிருந்தனர் என்று கூறல் பொருத்தமுடைத்தாம், இறைவனாணையுய்ப்ப வியங்குகின்றனராகலின்; முன்னர்ப் பிள்ளையவர்கள் இருமுது குரவர் மக்கட்பேறு கருதி நோன்புழந்தமை கூறவே வேறு பிள்ளைகளில்லையென்பதுதெற்றெனவிளங்குகின்றது. "மகவில்லா மனைவாழ்க்கை யினிமையென்னும்" எனப் பிறர்கூறுதல் கொண்டு மதுதுணியப்படும். அங்ஙனங்கிடைத்த பிள்ளையை யிங்ஙனம்விட்டுச் சென்றுற்றினரென்பது எங்ஙனம் பொருந்துமோ? ஆகலான், இச்செய்யுள்கள் வன்கண்மையையும், அன்பிலாமையையும் குறிக்கின்றன. இவை வரலாற்றொடு முரணுகின்றன என்பது வெளியாம். பின்னர், அடிகள் முன்னர் ஆண்டலைக் கொடியோனாகிய வாண்டவன் குமரனாகவொரு திருவுருக்கொடுபோந்து தன்னுண்மையைப் புலப்படுத்தி,

48 மருவிய நீயாரென்ன வாய்திறந் தடியே னென்னப்
பொருவிலக் காமுப் பானும் பொலிதரு மைம்பத் [தொன்றுந்
தருமிரு மொழிகட்குள்ள வியலெலா முணரச்சாற்றிப்
பெருகிலக் கியமுங் கூறிப் பிறழ்தராப் புலமை செய்து

49 கடன்மடை திறந்தா லென்னக் கவிபுகல் வாக்கு நல்கி
யடல்கெழு பிரசங் கத்தி னமைபெருஞ் சிறப்பு நல்கி
மடனிஞ் சமய மாதி வயங்குதீக் கைகளுஞ் செய்து
படர்மறை யனைத்துந் தேறுப் பதமலர் சென்னி சூட்டி

50 தவலருந் தவத்தா லெய்துஞ் சைவசித் தாந்த வுண்மை
நுவலுமுப் பொருளுந் தெள்ளி நூற்குரு பரனே யாதி
கவலில்செங் கற்றோ யாடை கவின்சடை வேடந் தாங்கி
யவமில்பக் குவர்க்கெம் முண்மை யறிவியென் [றுபதேசித்து

51 திருந்துவெண் ணீறு நல்கித் திருவுருக் கரந்தானையன்
வருந்துத லின்றி யெல்லாம் வாய்த்தமா தவத்தின் [மிக்கார்
பொருந்து செங்கற் றோயாடை பூண்டுசெஞ் சடைக [டாங்கி
யருந்திற லாறுகட்டி வேடமு மமையப் பூண்டு

52 கோலமலி திருச்செந்தூர்க் குமரவேள் கருணையினாற் [குமர னாகிச்
சீலமலி குருபரனீ யாதியென வாய்மலர்ந்த [திறத்தை யோர்ந்து
ஞாலமலி தவர்குமர குருபரனென் றுரைக்குமொரு [நாமந் தாங்கி
மூலமலி முதற்குரவ னருணினைந்தா னந்தவெள்ள [மூழ்கி னாரே

இச்செய்யுளாலறியக்கிடப்பன யாவை யெனின், அடிகள் இருமொழிவன்மை இறைவனாலருளப் பெற்றமையும், சிவதீக்கை முதலிய பெற்றமையும், குமரகுருபரனெனப் பெயர் தாங்கினமையும் பிறவுமாம். காவியப்பண்பிற் கியையவிரித்து முப்பதென்றும், ஐம்பத்தொன்றென்று மறைந்துளார்போலும். இறைவன்றிருவருள் பாலித்தான் அவ்வருள் கொடு அடிகள் ஊமை தீர்ந்தாரெனலே சாலு மன்றிப் பிறகூறல் சாலாதென்க. பின்னர்ப் பிள்ளையவர்கள் திருவாடுதுறையையண்மிச் சித்தாந்தந் தேறிக் குரவனைக் கொண்டாரெனச் சாற்றுதற்கமைய இவைகளைத்தோற்றுவாய் செய்தனர் போலும். ஆறுகட்டிச் சுந்தரவேட முதலியன திருவாவடுதுறைத் திருத்தளிக்கேயுரித்தாமன்றோ! இறைவன்றன் னறுமலரடியை அடிகள் முடியினிற் சாத்தித் தீக்கை செய்திருப்பானாயின், அடிகள் தம் நூலின் கண்கூறாதிரார். அப்பரடிகளும் "பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்" போற்றிசெய், மென்னாவி காப்பதற்கிச்சையுண் டேலிருங் கூற்றகல, மின்னாரு மூவிலைச் சூலமென்மேற் பொறியென வேண்டப் பின்னரது கிட்டியபின்னர் "இனமலர்கள் போதவிழ்த்து மதுவாய்ப் பில்கி நனைந்தனைய திருவடியென்றலை

மேல் வைத்தார்" எனக்கூறுவாராயினர். கந்தர்கலிவெண்பாவி னிறுதியிலுமடிகள், பல்விதமாம்—ஆசுமுதனாற்கவியும் அட்டாவ தானமுஞ் சீர்ப், பேசுமியல் பல்காப்பியத்தொகையும், ஓசை, யெழுத்து முதலாமைந் திலக்கணமுந் தோய்ந்து, பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து, ஒழுக்கமுடன்,' இம்மைப்பிறப்பி லிருவாதனையகற்றி, மும்மைப் பெருமலங்கண் மோசித்துத், தம்மைவிடுத்து, ஆயும் பழைய வடியாருடன் கூட்டித், தோயும் பரபோகந்துய்ப்பித்துச், சேய, கடியேற்கும் பூங்கமலக் கால் காட்டி யாட்கொண்டு, அடியேற்கு முன்னின்றருள்" என வேண்டல் செய்கின்றனரேயன்றிப் பெற்றதாக் கூறிற்றிலர். பெற்றிருப்பின் கூறுதிராரென்பதொருதலையாம். தீக்கை செய்யப்படும்வகை யிரண்டனுள் ஞானவதியாக முருகக்கடவுள் செய்திருப்பின் அதுவே யுயர்வினு முயர்வாம். அஃதொழித்துத் தருமபுரத்துறை சற்குருவினதருள்புனைந்து பண்டாரமும் மணிக்கோவை பாடியிருப்பதையுன்னின், இதுமாறாய் முடி கின்றது. இது குறித்துப் பண்டார மும்மணிக்கோவை பகர்ந்த தற்குப் பிள்ளையவர்கள் வேறு காரணங்காட்டிச் செல்லுதல் அம்மும்மணிக்கோவையினை நன்காய்ந்தால் அதுமுற்றிலும் பொருந்தாதென்பது புலனாகும்.

கல்லாடையுடை இச்சடைமுடிதாங்கி யெம்முண்மையினை யறிவி யென்றாணை செய்ததாகக் கூறுமடிகளை நோக்குழி, குமரகுருபரர் முருகப்பிரான் ஆணையை, குரவனாணையாகக் கொள்ளாது, 'முற்று மாறிகடந்தவராகவே கொள்ளப்படும், அடிகள் செய்த நூல்களனைத்தும் சிவபரம் பொருளையே குறித்தாகவே யிருத்தலின், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் ஒன்றுமே, இவ்வாணையைக் கடவாமையைப் புலப்படுத்தாதோ வெனின், பண்டாரமும் மணிக்கோவை யோராணையையும், சகலகலாவல்லிமாலை யோராணையையும் புலப்படுத்தி நிற்க வேண்டும். அங்ஙனமவை புலப்படுத்தாமையின் இஃதுங் கொள்ளவிடனின்றாய் முடியும். எம்முண்மை யறிவியென்று கூறினராயின் கௌமார மதத்தையே பரப்பல் வேண்டுமென ஆணை தந்தனரெனக்கொள்ளவும் இடந்தரும்.

"வருந்துதலின்றியெல்லாம் வாய்த்த மாதவத்தின்மிக்கார்" என்று கூறினவர் நமச்சிவாயவடிகளைச் சார்ந்து வணங்கிச் சித்தாந்தந்தேறினர் எனக்கூறல் மாறாய் முடியும். விரைவுபற்றியடிகட்கு, இங்ஙன மடை கொடுக்கப் பட்டதெனின் கூறற்கேற்ற வமயமு மீண்டில்லையென்க. முன்னைச்செய்யுளில், "தவலருந் தவத்தாலெய்துஞ் சைவசித்தாந்தவுண்மை நவலுமுப்பொருளுந் தெள்ளிநாற் குருபரனேயாதி" யென்றனரே அவ்வடிகொண்டு துணியப்படாவோவெனின், பிறரைக்கொண்டு தெளிவாய் எனப் பொருள்படாது நீயே துணிந்தறிந்து குரவனுருவையென்பதே சித்திக்கும். தெள்ளுதற்குப் பிறர் வேண்டப்படின் குரவனுதற்கும் பிறர் வேண்டுமாகலான்; அதுகொண்டுந் துணிதலேற்புடைத் தாகாதென்க.

> "இனையரிவ்வாறு மேவ லின்றவ ரீது கேட்டுத்
> துனைதர மகிழ்ந்து செந்தூர் புகுந்தவர் தோற்ற நோக்கித்
> தனைய ரென் றென்ன நீர்ந்து தங்குல தெய்வமென்றே
> நினைதரு முளத்த ராகித் தொழுதனர் நீங்கினரே"

தம்மூர்ப்புக்க தாய்தந்தை மீண்டுவந் தின்டடைந்துற்ற நற்றவச் செயலை யோர்ந்து மகிழ்ந்து திரும்பினர் என்றார். இதனால் தாய் தந்தையர்க் குள்ளசிறப்பு என்ன புலப்படுகின்றது. இவ்வரிய பெரிய செயலடைந்ததைப் பிற புதல்வர்ப்பேறுருத விருமுது குரவர் இவ்வடிகளைச் சார்ந்து நின்றேயன்றோ நன்று கடைப்பிடிக்கல்வேண்டும், அடிகளும் விடாதவர்களைத் தன்னகப் படுத்தல்வேண்டும். அங்ஙனமில்லையாயின், அடிகட்குப் பின்னர்ப் புதல்வர்ப்பேறுவது அவர்கட் குண்டாயிருததல்வேண்டும், அச்செயலு மிவ்வாசிரியர் குறித்திருப்பராயின் யாதோரிழுக்கு மின்றாம்.

பின்னர்க் கைலைக்கலம்பகம் பாடினவரலாறு குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரே தமிழ்மொழியிலேயே அடிகள் கந்தர் கலிவெண்பாப் பாடினமைக்குத் தக்கசான்று பலகொடு நிறுவின செய்யுள்கள் படிக்கப் படிக்கவின்பம் பயப்பனவாகும்.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்பாடித் திருமலைநாயகரால் வரவேற்கப்பட்டுச் சந்நிதியிலரங் கேற்றினதையும், அந்நாயகர்

பொருட்டு நீதிநெறி விளக்கம் பாடினதையும், சொக்கேசர் மீது மதுரைக் கலம்பகமொன்று புனைந்ததையும் முறையொடு புகன்றமை போற்றத் தக்கதேயாம். அடிகள் காலத்துத் திருமலை நாயகருளரென்பதும் அவரால் அடிகள் ஆதரிக்கப் பெற்றன ரென்பதும் அடிகள் நூலிலுள்ள சில சான்றுகள் பகரும்.

திருச்சிராப்பள்ளி யெய்தியபின்னர் அடிகள் பிள்ளைப்பெரு மாளையங்கார் எனவொரு புலவரோடு சமயவாதிட்டு வென்ற ரெனச் சரித்திரங் கூறுகின்றது.

திருமலை நாயகருடைய காலம் 300 வருடங்கட்கு மேலா கின்றது. அவர் காலத்து அடிகள் இருந்தனரென்பது "திருமலை பூபதிவாழ்க" என்பது ஒன்றுமே விளக்கி நிற்கும்.

பிள்ளைப் பெருமாளையங்கார் காலம் சுமார் எழுநூற்றறுப தென வைணவ சம்பிரதாயக் கிரந்தங்கள் பகர்தலால் இவர் அடிகளோடு ஒத்த காலத்தவரல்லரெனத் தோன்றுகின்றது.

அங்ஙனமாகக் காலமொத்து வாராமையால் இச்சரித்திரங் கூறுமாசிரியர் இங்ஙனங் கூறுவதற்கு நியாயமுண்டோவென வாராய்வுழி ஒரு நியாயமுங் காணப்படுகின்றது.

பிள்ளைப் பெருமாளையங்கார், தெள்ளுதமிழ்ப் பிரபந்தங்கள் பாடுதலில் வல்லவர் என்பது அவர் தம் நூல்களானே யறியக் கிடக்கும். அவர் வரலாற்றில், வைணவமொன்றே கண்ணெனக் கொண்டாரிற் சிலர் திருவானைக்காவிலுள்ள சில சைவப்பெரியார் களை வாதில் வென்றதாகவும், அவர்கள் தம்பெருமானர் மீது பிள்ளைப்பெருமாளையங்காரைப் பாடுமாறு பரவிக் கேட்டுக் கொண்டார்க ளென்பதாகவும் பலபடியாக எழுதிவைத்துக் கொண்டார்கள். அவர் காலத்தரசன் பெரிய திருமலை நாயகர் எனவும் கூறியிருக்கின்றனர். இவ்வரலாறு எவ்வாற்றானும் பொருந்தாக் கூற்றுப் முடியுமன்றியுண்மைக் கூற்றுப் முடியாது. சைவவைணவர் சண்டை சங்க காலத்திற்கும் பிற்பட்ட காலத் திலேயுண்டாயதென்பது பல வறிஞர்களது துணிபு. இவ்வர லாற்றைக் கண்ட திருக்கயிலாய பரம்பரை யாதீனத்துப் பெரும்

புலவர் சிகாமணியாகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வாளா விடுவாரோ! பாக்கள் புனைதரலும் என்மையன்றோ! ஆகலின் அவ்வரலாற்றுக்குமாறாக அத்திருமலை நாயகரே, நாயகராக வைத்து அப்பிள்ளைப் பெருமாளையங்காரை பலபடியாக வினவித் தோற்குமாச்செய்து சிவபரத்துவங் காட்டிச்சென்றனர் எனப் பாடினரேயல்லாமல் வரலாற்றுக்கு மாறுபட்டதெனக் கொள்ளக் கூடாது என்பது என்னுடைய நினைவு. இங்ஙனம் பலவூர்க் கோயில்புக்குக் கண்டு களித்துத் திருவாவடுதுறையை யண்மிய வடிகள்,

148 தாதமார்க் கத்தருந் தழுவு மைந்தரென்
றோதமார்க் கத்தரு முலப்பி லாச்சக
நீதமார்க் கத்தரு நெடுஞ்சன் மார்க்கராம்
போதமார்க் கத்தரும் பொலியக் கண்டனர்

149 சாற்றுமித் தானமோர் தானந் தானெனப்
போற்றுசீர்க் குருநமச் சிவாய புண்ணிய
னாற்றுபே ரருணினைந் தகம கிழ்ந்தனர்
தோற்றுபே ரறந்தலை யெடுப்பத் தோன்றினர்

150 தாமலி குமரசு வாமி சற்குரு
வரவர வெனத்திரு வாய்ம லர்ந்திடக்
கரமலர் குவித்தனர் வணங்கிக் காமர்சா
லூரவரு கிடனுற வுவந்து வைகினர்

151 போதத்திற் சித்தியிற் பொருந்த மற்றுள
மேதகு நூல்களிற் பலவி னவியே
யாதரங் கூர்தெளி வுண்மை யாய்ந்தன
ரோதுநங் குரவனே யெனவுள் ளோர்ந்தனர்

152 மருவுற வளவளாய் மகிழ்ந்து பின்னெழீஇப்
பொருவரு வடமடம் பூசை யாற்றிவந்
தருள்செறி பத்தியி லமுது கொண்டனர்
வெருவிலவ் விடனெரீஇ விடைபெற் றேகினர்—எனச்

சாற்றுகின்றனர். இங்ஙனம் நமசிவாய வடிகளைக் குரவனுக்

கொண்டு சித்தாந்தவுண்மை தெளிந்திருப்பாராயின், அவ்வருட் குரவனார்மீது ஒரு செய்யுளாவது பாடாதொழிவரோ! அடிகள் திருமலை நாயகரையுமொரு பொருட்டாப் பாடினவருக்கிப்போருட் குரவனை பாடுதல் ஒரு பொருட்டாகாதோ! என்னே! இச்சரித்திர காரர் வரலாறுரைப்பது விந்தையினும் விந்தை! மேல், பொருநறை புகுமயிற் புலவர் மானவர் எனவும் வேற்கைப்பிரானர் மாணுக்க ரெனவும் கூறியவர் அதற்குமாறாக ஒதுநங் குரவனேயென வுள்ளோர்ந்தனர். மாறு ஒன்றுமின்றே அன்னவனே யாவன் இவன் எனவுன்னினன் எனக்கோட்லாமன்றோ எனின், முன்னர் செந்திலாண்டவன் றம் முண்மை சாதிப்பவெனக் கூறினமைக்கு மாறாகச் சித்தாந்தவுண்மை தேறினரென்று கூறலே மாறுபடு தலின் கோடல் பொருந்தாததாய் முடியும் என்க.

அடிகள் திருவாவடுதுறையை யண்மினர் வழிபாடாற்றினர் என்பதில் யாருக்குந் தடைவாராதென்க. அஃது எவ்வாறாயினு மாகுக, பண்டாரமும் மணிக்கோவை பாடின வரலாற்றுக்குமாறாய் இவர் வரலாறுரைத்தலொல்லுமா வென்பதாய்தல் வேண்டு மென்பதே யிக்கட்டுரையின் பெருநோக்கமாகும்.

திருவாவடுதுறையை யெய்திய வடிகளார் அங்கு நின்று நேரே மாயூரஞ்சேர்ந்து அதன் பின்னர் தருமபுரத்துற்று, அவ்வூர்ப் பரமனையுமன்புகொடு வணங்கித் துதித்து நிற்கையில் அவ்வூர் மடத்தடியர் குழாம் வந்து தங்கள் மடத்திற்கெழுந் தருளவேண்டுமென வேண்ட அவ்வேண்டுகோட் கிணங்கி யித்திருத்தளியும் நோக்கற்குரிய இடமே யாமென,

*திருமடத் திட்புகுந் தருளித் தேசிகர்
அருகுமேச்ன் றிருந்தன ரான்ற கேள்வியின்
மருவிய பற்பலர் வந்து சூழ்ந்தனர்
பொருவற வளவளாய் மகிழ்ச்சி பூத்தனர்—என்றார்.

இச்செய்யுளை நோக்குழி தருமபுரத் திருத்தளியுறை ஞான குரவரும் திருக்கயிலாய பாம்பரையினரே யாவரென்பதுந் தாம் முன்னர் மதுரையில் எழுந்தருளிய ஞான்று மீனாட்சியம்மை பிள்ளைக்கவியும் சொக்கநாதர் மீது கலம்பகமுபாட அவ்வரும்

பிரபந்தங்களைக்கேட்டு மகிழ்ச்சி பூத்த அவ்வம்மையையும் அவ்வப் பணியுமே இத்திருத்தளியின் முதற்குரவனா யெழுந்தருளியிருந்த ஞானசம்பந்தப் பெருமானார் வைத்துப் பூசித்து வழிபாடாற்றின ரென்பதும் அடிகட்கு நன்கு தெரியவாராமலிராது. அங்ஙன முணர்ந்து அடிகள் தேசிகரை வழிபடாமல் வாளாவிருந்திருப்பின் அப்பரம்பரையினரையும், அச்சொக்கலிங்கப் பெருமானையும் மிக விகழ்ந்தவரே யாவரென்பது நாங்கூற வேண்டியதின்று, வெளிப் படையாகவே யறியக் கிடக்கின்றமையின். ஏனைய விடங்களினும் எத்துணையோ வகையில் தருமபுராதீனம் சிறிதென்று சான்றோர் பகர்தலும் கேட்கப்படுகின்றது. உலகர் அறிந்துவைத்தது மொன்றும்.

தருமபுரத்து நான்காவது குருவடியா யெழுந்தருளிய மாசிலாமணிப் பெருந்தகையின் பெருமையினை இவ்வடிகளாரே மும் மணிக்கோவையில் பகர்வதைப் பார்க்கினும் நாம் பகர்தீற் கெத்துணையாவோம்.

159 "மாசறு பெரும்புகழ் மாசி லாமணித்
தேசிகர் பெருவளச் செந்தி லாதிபர்
விசிய போருள் சுமந்த மேலவர்
தேசு சான் முகங்குறித் திதனைச் செப்புவார்

160 குற்றமில் கல்வியுங் கோதின் ஞானமும்
அற்றமில் குமாரவே ளருளிற் பெற்றவர்
மற்றவன் றந்தையார் மலரடித் தொழும்
புற்றவர் தமைவணங் கார்கொலோ வென்றார்"

இச்செய்யுளைக் காண்பாராய வறிஞர் யாருநகையாடாமலிரார். வணங்காத வடிகளை யிங்ஙனம் வணங்குமாறு அருட்குரவன் வேண்டினனென்பதை நோக்கின், இக்காலத்துப் போலிவேடதாரிகளைப்போற் கருதினர்போலும் ஆக்காலத்துக் குரவர்களையும். இப்பிள்ளையவர்கள் மாசிலாமணித் தேசிகரே, குமர குருபரவடிகளிடத்துப் பேருபதேசம் பெற்று அவர் வழித்தொண்டராயினர் எனச் சாற்றியிருப்பரேல் நூலாசிரியரை யுலகம்பெரிதும் போற்றியிருக்கும்! இஃது விந்தையினும் விந்தையே யாம்! ஞானயோகங்

கைவரப்பெற்றவராகிய மாசிலாமணிப் பெருந்தகையார், தன்னை வணங்கும் வணக்கத்தை யொரு பொருளாக் கொண்டிரார். ஆகலின் அடிகளை யிங்ஙனங் கேட்டனரென்றல் பொருந்தாவுரை யாம் என்க. தந்தையார் மலரடித்தொழும்புற்றவர் தமை வணங்கார் கொலோ எனவின் இக்கொள்கையே குறித்துணரவுங் கிடக்கும்.

மாசிலாமணியார் மேலும் அடிகளைப் பலபடியாக வினவிய தாகக் கதைகட்டிச் செல்லுதலும் மேற்கூறி யாங்கே யமைத்துக் கோடல் வேண்டியதாகின்றது. வணங்க வேண்டுமெனுங் கொள் கையைக் கொள்கையாக் கொள்வாராயின் அடிகளொடுரை யாடவுங் கூசி மன வேறுபாடும் உண்டாகி யகலுமாச் செய்திருப்பர்.

166 "ஐந்துபே ரறிவெனுஞ் செய்யு ளத்தமென்
முந்துநீ ரியம்புகென் றவர்மொ ழிந்திட
நந்துமச் செய்யுளின் பொருண விற்றுகே
னுந்துநீர் செம்மையேற் றுறினென் றாரோ"

இச்செய்யுளை யாராய்வுழி, வினவிற்கு, அச்செய்யுளின் பொருள் நவிற்றுகேன் உந்துநீர் செம்மையேற்றுறின் என்றார் எனப்பகர்ந் ததைப் பார்க்கின் முற்றுந் துறந்து கல்லாடையுடீஇ ஆறுகட்டிச் சுந்தர வேடந்தாங்கிச் சடைமுடி தரித்துக் கற்பவை கற்றுணர்ந்த தவயோகியார் ஆகிய குமர குருபரர் இங்ஙனம் ஒரு மடத் தலைவரை யிகழ்ந்திருப்பர். அறிஞர்களே! நீங்களே யிதனையாய்ந்து முடிவு கட்டுங்கள். அறிவறிந்தடங்கிய வடிகள் விடைதானும் அணவ முனைப்புகொடு பகர்வாரென்பதே யெற்கையம்.

இதற்கு மேனிகழ்ந்த நிகழ்ச்சிக்குரிய பாடல்கள் பதிப் பாசிரியரே பதிப்பிக்கவில்லையென அடிகள் வரலாற்றில் வரைந் துளேன், ஆண்டு அதனை காண்க.

174 "எங்க ளாரியன் மேற்றுநி யாங்களெப் போதும்
உங்கள் பேரரு ளாற்செயல் வேண்டுமற் றதற்குத்
திங்கள் சூடியோன் றிருமக னருட்செல்வ
நங்கள் வாழ்வெனப் பெற்றுளீர் நயந்தருள் புரிவீர்"

175 "என்று வேண்டலு மும்மணிக் கோவையொன் றியம்பி
யொன்று மாதுநித் திருமினென் றவர்காத் துதவிச்
சென்று நீள்வட மடம்புகூஉப் பூசனை செய்து
வென்று மேவுவார் சிலபகல் விழைந்தவ ணமர்ந்தார்"

எனப் பண்டாரமும் மணிக்கோவையெனப் பெயரையுஞ்சுட்டாது "மும்மணிக்கோவை" யெனச் சுட்டி அந்நூலே மாசிலா மணிப் பெருந்தகை தம்மாசிரியர் மீது பாடுமாறு வேண்டப் பாடி முடித்தடிகள் தந்தனர் என்பதே, இச்செய்யுட்களின் பொருள். தம்மாரியன் மேற்றுதிசெய வேண்டுமெனச் சாற்றி யிருப்ப, அடிகள் மும்மணிக்கோவையில் மாசிலாமணியெனச் சுட்டியிருத்தல் யாரைக்குறிக்கும்? மாசிலாமணியாகிய ஞானசம் பந்தர் எனக்கொண்டு பாடியிருத்தல் கூடுமென ஒருவர் உரை யுரைப்பான் வருவாரேல், நூல்முற்றிலுங்கொள்ள றகுமாறென்னை யெனவினுவி வெருட்டலே யேற்புடைத்தாகும். மாசிலாமணி யார், முன்னுள்ளவர்கட்கும் முதலாவதாயுள்ள குரவன் ஞான சம்பந்தப் பண்டார சந்நிதியாவரன்றே. அவர்வேறு இவர்வேறு ஆகப் பகுத்துணரப்பதின்றென்ப நின்றும் பொருந்திய வழக்க மென்பதுலக மறிந்ததொன்றன்றே. சங்கார் மடத்துச் சாமிகளைச் சங்கார் எனவே சாற்றுகின்றனரே, பழய சங்கார் உலக குருவா யிருந்ததால் இக்காலத்துச் சங்கரரையுமங்ஙனமே வழக்கிட்டாள வில்லையா? இவைகளையெல்லாம் பிள்ளையவர்கள் தம்மையாதரித்த பெருமடத்துப் பழக்க வழக்கங்களில் கண்டு வைத்தவரன்றே. அங்ஙனமாகவும் நூல் வரலாற்றைப்பற்றிச் சரித்திரம் பாடுகையி லிங்ஙனம் கூறல் பொருந்துமா? உலகர், தாமியற்றிவைத்த நூல் களைப் படிக்கமாட்டார்களென்று துணிவுபற்றியே சாதித்திருத்தல் வேண்டும்போலும். அன்றித் தம் குழுவினர்மட்டுங் கண்டுகளிக்க வேண்டுமெனக் கருதியே யின்னணம்பாடிச் சென்றனரோ, அறிஞர் துணிக.

அக்காலத்துத் திருத்தளியுறை பெருங் குரவர்கட்குப் பண்டாரமெனும் பட்டப்பெயர் உண்டு. அதுவே சிறிய பட்ட மாகவும் போற்றுதலாகவும் எற்றமாகவுங் கொண்டனர். இக்காலத் திலோ, பாவனையென்ற மொழி யெங்ஙனம் ஆட்சியுள்ளதோ

அவ்வாறாகவே பண்டாரமென்றபட்டமும் இழிவுபட்டதுபோலும் இக்காலத்துக் குருமார்கள் குருக்கள் பட்டமும், தேசிகர்பட்டமும், இன்னுஞ் சில பட்டமும் தாமே சூட்டிக்கொள்வாராயினர். இப்பட்டங்களையும் ஆராய்தல்வேண்டும். ஒவ்வொரு காலத்து ஒவ்வாருமொழிக்கும் பொருட்சிறப்பும் சிறப்பின்மையு முண்டாவதுமிவ் வழக்குப் பற்றியோ?

மேலும், இச்சரித்திரஞ்செய்த மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை யிக்காலத்துப் புலவர்களிற் பலர் பெயர் கூறாதே, பிள்ளையவர்கள் எனச் சாற்றுகின்றனரே, அக்காலத்து நமச்சிவாயப் பண்டாரம் எனத் திருத்தளித் தலைவரையும் சாற்றியிருப்பார்கள். ஆகலின், நம் குமர குருபரர் சீரிய பட்டப் பெயராகிய பண்டாரம் என்பதை முன்மொழியாக நிறுத்தி மும்மணிக்கோவையைப் பின்மொழியாக்கி யுரைத்தாரவர் என்பதே தேற்றம். பண்டார மும்மணிக்கோவையில் பிள்ளையவர்கள் சாதிக்கும் சாதிப்புக்கு ஆதாரவுண்டாவென வாராய்வாம்.

பண்டார மும்மணிக்கோவை.

அடிகள் தாமியற்றிய இந்நூலின் வனப்பை நோக்குகையில் உள்ளும் புறம்புமொத்து மாசிலாமணியாரையன்றி யொரு குரவனுர் தன்னையாண்டாரில்லையென வுண்மை யுரைத்துச் சென்றிருக்கின்றுர் என்பதே புலப்படுகின்றது. இம்மடத்து மாணுக்காரகவே அடிகளைக் கொண்டுள்ளார்கள். அதற்குப் பல வாதாவுகளின்றுமுண்டு. அன்று முண்டு. தருமபுராதீனத்தைச் சார்ந்ததாகவே பனசைப் பெரும்பதியின்கண் குமரகுருபரர் திருத்தளியொன்று கட்டுவித்தனர். பனசைத் திருத்தளியாயாரும் தருமையாதீனத்தையுங்குருபீடமாகக் கொண்டின்று மொழுகுகின்றனர்.

காப்பு "எண்டிசைக்குஞ் சூளா மணிமா சிலாமணிசீர்
கொண்டிசைக்கு மும்மணிக் கோவைக்கு" எனவும்

"ஞானப்பிரகாசன், இன்னருள் பழுத்த செக்நெறிச்
திருக்கிளர் ஞானத் திருத்திழைக் கனியாம் [செல்வன்

அருட்பெருஞ் சைவத் தருங்கல நாப்பண்
ஆசற விளங்கும் மாசி லாமணி" எனவும்

"வானின்ற சின்மயமா மாசிலாமணி" எனவும்

"ஒள்ளொளி பரப்பும் வெள்ளி வேதண்டத்
தொருபாற் பொலிந்த மரகதங் கவினச்
சுடர்விடு செங்கதிர்க் கடவுள்மா மணிக்கு
விளங்கெழின் மிடற்றோர் களங்குமுண் டென்பவக்
காசுலா மலினங் கரந்தகா ரணத்தான்
மாசிலா மணியென வண்பெயர் நிறீஇ
மேன்மை யோடமர்ந்த ஞானசம் பந்த" எனவும்

"அவமா சிலாமனத் தார்க்கா ருயிரா ஞானேற்
பவமா சிலாமணிச் சம்பந்தா" எனவும்

"என், னுடல்பெற்ற கண்மணிக் குண்மணி
[யாகியொண் கூடல்வைகு
மடல்பெற்ற ஞானச் சுடர்மா சிலாமணி யானது" எ.ம்.

"தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலுந்
திருநக ராக வாசுவிற் றிருக்கு
மாசி லாமணித் தேசிக ராய" எனவும்

"எம்மா ருயிரா மெழின்மா சிலாமணியை
அம்மா பெறுதற் கரிதென்றே" எனவும்

"அருட்கூடல் வைகும், கனிகொண்ட கொன்றைத்
தொடைமா சிலாமணி" எனவும்

"வார்புன லதனை மந்திர முதலா
ஓரா றுவகைப்படு மேரிக ணிரப்பி
விளைவன விளைய விளைந்தன ரறுத்தாங்கு
ஒருகளஞ் செய்யு முழுவ னாகி
மாநிலம் புரக்கு மாசி லாமணி
ஞான சம்பந்த ஞான தேசிக" எனவும்

இதன் தொடர்பு 354-ல் பார்க்க.

பரணர்.

திரு. வித்வான். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
ஆசிரியர், போர்டு உயர்தரக் கலாசாலை, காவிரிப்பாக்கம்.

(முற்றொடர்ச்சி 283-வது பக்கம்.)

கரிகாலன்.

இவன் காலத்தே ஆரியரது நாகரிகம் தமிழ் நாட்டிற் பரவிவிட, அதன் பயனாக வந்த வேட்டல் வேட்பித்தல் என்பன போன்ற நெறிகளுள் வேட்டல் என்பதனைக் கரிகாலனும் ஏற்றுச் செய்துள்ளான், என்பது இவன் இறந்த போழ்து இவன் பிரிவாற்றாது உலகினை நோக்கி வருந்திக் கூறும் கருங்குழலாதனார் என்பாரால், படிப்போருள்ளம் நெக்கு உருகும் வகையிற் பாடப் பெற்றுளது. அது:

"அருப்பம் பேணாது அமர்கடந் ததூஉம்
துணைபுண ராயமொடு தசும்புடன் தொலைச்சி
இரும்பா ணொக்கல் கடும்பு புரந்ததூஉம்
அறமறக் கண்ட நெறிமா ணவையத்து
முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பருதி யுருவிற் பல்படைப் புரிசை
யெருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழில் முடித் ததூஉம்
அறிந்தோன் மன்ற அறிவுடை யாளன்
இறந்தோன் தானே, அளித்துஇவ் வுலகம்.
அருவி மாறி அஞ்சுவரக் கடுகிப்

பெருவறங் கூர்ந்த வேனிற் காலைப்
பசித்த வாயத்துப் பயனிரை தருமார்
பூவாட் கோவலர் பூவுட னுதிரக்
கொய்துகட் டழித்த வேங்கையின்
மெல்லியன் மகளிரும் இழைகளைந் தனரே."

என்பது.

இதுகாறும், கரிகாலனது வரலாற்றினை நாம் தொகை நூல்களையே பெரும்பான்மை துணையாகக் கொண்டு கூறி வந்தோமே யன்றி, சிலப்பதிகாரத்து இவன் செய்திகளெனக் கூறப்பெறுவனவும், தொகைநூல்களுள்ளும் இவன் இருங்கோ வேளை வென்றதும், வேங்கடவரைப்பைத் தனதாக்கியதும் பிறவும் விரிவஞ்சிக் குறித்திலேம்.

இனி, ஆசிரியர் பரணரால் சிறப்பிக்கப் பெற்ற குறுநில மன்னர், தலைவர் முதலாயினோருள் பெரும்பாலும் புகழ்ந்து பாராட்டப்பெறும் நன்னன் என்பானது வரலாற்றினைக்காண்பாம்.

நன்னன்.

நன்னன் என்பவன் சேரநாட்டைச் சேர்ந்த பகுதியினை ஆண்டுவந்த குறுநிலமன்னர்களுள் ஒருவன். இவனதுநாடு கொண்கான நன்னாடு என்பது. அதனருகில் புள்ளிநாடு என்றோர் நாடு அதிகன் என்னும் குறுநில மன்னனால் ஆளப்பெற்று வந்தது. இவன் அவ்வதிகனைக் கொன்று அந்நாட்டையும் அடிப்படுத்திக் கொண்டபின் அதுவும் இவனதாகக் கூறப் படலாயிற்று. அது "நன்னன் புள்ளிநாடு" எனவருவது. இப் புள்ளிநாடு என்பது பூழிநாடாதல் வேண்டும் என்று கருதினோர், இதனைப் பூழிநாடு என்றும், இவனும் அப் பூழி நாட்டை யாண்ட குறுநில மன்னன் என்றும் கூறுவாராயினர். மற்று, இவனது நாடு கொண்கானநாடு என்பது ஆசிரியர் பாலைபாடிய பெருங்கடுங்கோவால் "பொன்படு கொண்கான நன்னன் நன்னாடு" என்று பாராட்டப் படுதலால் அறியப் பெறுகின்றது.

† இக் கொண்கான நாடு பின்னர்க் கொங்குநா டென்றும் கொங்கணநா டென்றும் மருவி வழங்கி வரலாயிற்று என்றும், இந் நன்னனும் "நன்னன் உதியன்" (அகம். 258) என வழங்குதல் கொண்டு, சேரனாதலால், இந்நாடும் சேரனாட்டின் ஒரு பகுதியாதல் வேண்டு மென்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். வேறுசிலர் இவை யிரண்டும் வெவ்வேறு நாடுகளாம் எனக் கூறிப் பண்டை யிலக்கியங்களிற் கூறப்படும் கொண்கான நாடு இக்கால மைசூர் நாட்டின் தென்பகுதியும் சேலம், கோயம்புத்தூர் ஆகிய நாடுகளும் கிழக்கு மலைத்தொடர், நீலகிரி, மேலகிரி முதலிய மலைப்பகுதிகளும் தன்னகத்தே கொண்டிருந்த தென்றும், கொங்குநாடு இக்கால மைசூர்ப் பீட பூமியின் தென்பகுதியும், திருநெல்வேலி, இராமநாதபுரம், கீழ் மதுரை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னார்க்காடு முதலிய நாடும் கொண்டிருந்த தென்றும் கூறுப.*

---

† இதனைத் துளுநாடு என்பர் திரு. S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள்.

* "Lower down, between Coimbatore and Anaimalais, there is the broad Palghat gap cut across the Ghats by a river of a former geological epoch, which links up the Konkan Coast with the upper reaches of the Kaveri. This region merges imperceptibly into the South Maisur region through the lowlands on either side of the Shervaroys gap, so that South Maisur, Coimbatore and Salem form one natural plateau region, studded with uneroded remnants of the Easten Ghats, like the Nilgiris and the Melagiris. The whole of this natural region was also called Kongu Nadu, as is proved by the fact that the book which narrates the legendary history of the early kings of this country is called Kongu Desa Rajakkal. This was the Konganam of early Tamil Literature, whereas the word Kongu Nadu was more often used in a more restricted sense, viz. being applied to the region between the south of the Maisur plateau and the region less than 500 feet above sea-level which form Tinnevelly, Ramnad, Lower Madura, Pudukottah, Trichinopoly, Tanjore and South Arcot"—A paper on "Geographical Control of Early Kongu History" read by Mr. P. T. Srinivasa Iyengar M.A., University Reader of Indian History, at the first conference of the Madras Geographical Association, May 1930, at Coimbatore.

இனி, இவற்றுட் கொங்குநாடு வேறுபிரிக்கப்பட்டமையை யேற்று, அது "கொங்கர் குடகட லோட்டிய ஞான்றை" எனவும் "கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே" எனவும் வரும் புறப்பாட்டடிகளையும் பிறவற்றையும் அடிப்படையாகக் கொண்டு, பண்டு தொட்டே தனி நாடாகக் கொள்ளப்பட்டுள தென்றும், இது சோனாட்டினைச் சேர்ந்தது என்றற்குக் கூறும் சான்றுவனவாய திருப்புகழ், தலபுராணங்கள் ஆதியவற்றைப் பிற்காலத்தாரது கேள்விமாத்திரையாற் பெறக்கொண் டெழுதியவா மென்று கூறியும், கொங்குநாட்டு மக்களது நாகரிகம், ஒழுக்கம் முதலியன வனைச் சேர கோள நாட்டு மக்களின் நாகரிகம், ஒழுக்கம் முதலியவற்றின் வேறுபட்டிருத்தலே மிக்க சான்றும் என்றும், கொங்குநாட்டின் வரலாறு கூறும் கரணபரம்பரைச் செய்திக்கு வேறு ஆதாரமில்லை யென்றும் சிறந்த முறையில் ஆராய்ந்து, திரு. C. M. இராமச்சந்திர செட்டியார் B.A. B.L., அவர்கள், அழகுபெற முடிபு செய்கின்றார். ஆனால் இவ் வாராய்ச்சியின்கண், கொங்குநாட்டின் பண்டைக்கால எல்லை முடிபு கூறப்பெறவில்லை. நிற்க.

இனி, இவனது கொண்கான நாட்டின்கண் பாரம், பிரம்பு வியலூர் என்னும் ஊர்களும் பாழி, எழில் முதலிய மலைகளும் இருந்தன. இவற்றுள் பாழி யென்பதனை "முன்பு வடுகர் கைப்பற்றி ஆண்டுவருநாளில் சோழன் செய்தலங்கானலிலுள்ள இளஞ்சேட் சென்னி யென்பவன் படையொடு சென்று பொருது வடுகர்களைக் கொன்று பாழியை யழித்து மீண்டான். ஆதலால் அவன் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட் சென்னி யெனவும் கூறப்படுவன்." இதுபற்றியே இவனை,

* "தென்பரதவர் மிடல்சாய
வட வடுகர் வாளோட்டிய
தொடையமை கண்ணித் திருந்துவேற் றடக்கைக்
கடுமா கடைஇய விரிபரி வடிம்பின்
நற்றார்க் கள்ளின் சோழன்" என ஆசிரியர் ஊன்

* புறம், 378.

போதி பசுங்குடையார் தம் நகைச்சுவை ததும்பும் புறப்பாட்டினிற் புகழ்ந்துரைப்பா ராயினர். இங்ஙனம், இப்பாழிச்சிலம்பு இளம்பெருஞ் சென்னிக்கும் வடுகர்க்கும் நடந்த பெரும்போர்க்கு இடனுயிருந்தமை

"எழாஅத் திணிதோட் சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிக்கட னாகலின் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
* வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்ற யானைக் கோட்டிற் றோன்றும்
அஞ்சுவரு மாபின் வெஞ்சுரம்" (அகம். 375) என

ஆசிரியர் இடையன் சேந்தன் கொற்றனார் விரித்துரைத்தவதனால் விளங்குகின்றது.

இக் கொண்கானம் புலவர் பாடும் புகழுடையது. இந் நாடு கொண்கானம் என்னும் மலையைத் தன்னகத்தே யுடைமையான், இப்பெயர் பெற்றது. இம்மலை, "அறுவைத், தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத், தண்பல இழிதரும் அருவி"களை யுடையது. மலைபடு பொருளான பொன்னை மிகவுடையது †. இது "பொன்படு கொண்கான நன்னன் நன்னா"டெனப் பாலை பாடிய பெருங்கடுங் கோவாலும்,

"இன்களி நறவின் இயல்தேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவாஅன்
பொன்படு மருங்கின் மலை" என முள்ளியூர்ப் பூதியாராலும் முறையே, நற்றிணையிலும் அகநானூற்றிலும் புகழப்படுகின்றது. மேலும், ஆசிரியர் மோசிகீரனார் தாம் இயற்கையாகவே பாடும் பொருளாழமும் அணிநலமும் அமையும் முறையில் இம்மலையை,

---

* வம்பவடுகர்: புதியராய் வந்த வடநாட்டினர்.

† Journel of the Madras Geographical Association nos. 2 & 3 Vol. .5

"ஒன்றுநன் குடைய பிறர்குன்றம் என்றும்
இரண்டுநன் குடைத்தே கொண்பெருங் கானம்
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினும் கிடக்கும் அஃதான்று
நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்கும் செம்மலு முடைத்தே"

எனக் கொண்கானங்கிழான் என்னும் வள்ளலைப் புகழுமுகத்தாற் சிறப்பிப்பது மிக்கசுவை தருகின்றது.

இந் நாட்டின்கண் விளங்கிய நகரங்களுள் பாரம், பிரம்பு, வியலூர் என்பனவற்றுள் பாரம் என்பது, "பாரத்துத் தலைவன் ஆர நன்னன்" என்பதனால் இவனுக்கே உரித்தெனினும், பாப்புடைமையும் செய்மையும் உடைமையின் இவனது படையின் தலைவன் மிஞிலி யென்பவனால் காக்கப்பட்டு வந்தமையின், "வில்லோர் பெருமகன், பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும் பாரம்" என்று நற்றிணையிற் கூறப்படலாயிற்று. இதன் அண்மையிலேயே பாழிச்சிலம்பும் பாழி யென்னும் நகரும் இருந்தன வாதலால், அவையும் மிஞிலியின் காவற்குள் ளிருப்பவாயின.

பிரம்பென்பது நீர்வளம் மிக்க ஊர்போல் தோன்றுகின்றது. மலைநாடாதல் பற்றிச் சிறு குன்றங்களில் வீழ்தரும் அருவிகளும், அருவிநீர் நிறைந்து ஆம்பல் முதலியன தழைத்த துறைகளையு முடையது. இதனை, "அருவி யாம்பல் கலித்த முன்றுறை, நன்னன் ஆஅய் பிரம்பு" என்றனர் ஆசிரியர் பரணர். இந் நகரத்துக்கு "ஆஅய் பிரம்பு" என்பதும் பெயர் போலும். வியலூர் என்பது பசலைக்கொடி படர்ந்த வேலியுடைய தென்றும், இது நன்னனுக்கு உரித்தென்றும் ஆசிரியர் மாமூலனார் கூறுகின்றார். அது,

"நறவுமகி ழிருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர்" (அகம். 97) என வருவதாகும்.

பாழி யென்பது பாழி மலையை யடுத்திருந்த சீரிய காவ

லமைந்த பேரூராகும். இவ்வூரில் யாழ்வல்லவர் பலர் வாழ்ந்தனர். இது தன் "முறையியல் வழாஅது ஆற்றிற் பெற்ற" நகரம். இங்கே, நன்னன் தான் ஈட்டிய பொருளை வேளிர் பலர் காப்ப வைத்திருந்தான். இப்பாழிச் சிலம்பில் கடவுளர் இருந்து காவல் புரிந்தனர்; எங்கும் பெரிய அடை பொருந்திய தேன் தூங்கி நலம் பயக்கும். இது,

"சூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி யன்ன கடியுடை வியனகர்" (அ. 15) எனவும்,

"முறையியல் வழாஅது ஆற்றிற் பெற்ற
கறையடி யானை நன்னன் பாழி" (அ. 142) எனவும்,

"நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமை" (அ. 258) எனவும்,

"அருந்தெறல் மரபின் கடவுள் காப்பப்
பெருந்தேன் தூங்கு நாடுகாண் நனந்தலை
அகங்குடை வரைப்பிற் பாழி" (அ. 372) எனவும்,

ஆசிரியர் பரணர் பல விடத்தும் கூறுவது கொண்டு உணரப்படும்.

இனி, நன்னன் என்னும் பெயர் அக்காலத்திற் பல விடத்தும் பயின்று வந்த தென்பது, சிலப்பதிகாரத்தில் "இளங்கோ வேண்மா ளுடனிருந் தருளி" என்ற காட்சிக் காதை யடியின் அரும்பதவுரை, "இளங்கோ வேண்மாள்— பெயர், நன்னன் வேண்மாள், உதியன் வேண்மாள்" என்று கூறுதலாலும், மலைபடு கடாம் என்னும் கூத்தாற்றுப்படையின் தலைவன் ஒருவன் செங்கண் மாத்து வேள் நன்னன் சேய் நன்னன் என்ற பெயருடன் வருதலாலும் தெரிகின்றது. இந் நன்னனும் நன்னன் வேண்மான் என்று வழங்கப் பெறுதலும் உண்டு.

நாம் மேற்கண்ட கொண்கான நாட்டின் பகுதியான சேல நாட்டின் அருகும் திருவண்ணமலைக்கு மேற்கிலும் உள்ள செங்கண்மா என்னும் நகரம் கொண்கான நாட்டினைச் சேர்ந்

திருத்தல் கூடும் என்று உணரவும் கிடக்கின்றது. அதனால், இக் கன்னன் சேய் நன்னன் என்பாரும் இக்தக் கொண்கான நன்னனது குடிப்பிறந்தாரே யென்று துணிய வேண்டும்.

இனி, நன்னன், வேண்மான் என்று வழங்கப் பெறுதலால் இவன் வேளிருள் ஒருவன் என்று கொள்ளல் வேண்டும். வேளிர் என்பார் மலைய மாதவனால் வடநாட்டினின்றும் கொணரப் பெற்றவர் என்பது தொல்காப்பிய நச்சினார்க்கினியர் உரையால் தெரிகின்றது. இவர்கள் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடை நேர்தற்கு உரிய வேளாளரு மாவர். இவர்களுட் சிறந்த நன்னன் குணங்களா லுயர்ந்த வள்ளலாவான். இவன்,

"மலர்போல் மழைக்கண் மங்கையர் கணவன்
முனைபாழ் படுக்கும் துன்னருந் துப்பின்
இசைநுவல் வித்தின் நசையே ருழவர்க்குப்
புதுநிறை வந்த புனலஞ் சாயல்
மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி
வில்லவில் தடக்கை மேவரும் பெரும்பூண்" நன்னன்

ஆவான். இவன்,

"தொலையா நல்லிசை உலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவர் அருங்கலம் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்கும் ஈகை மாரியும்
இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும் புகழுநர்க்கு
அரசுமுழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு
வியாது சுரக்கும் நாண்மகி ழிருக்கையும்
நல்லோர் குழீஇ நாநவில் அவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் நயக்கும் சுற்றத் தொழுக்கமும்,
ஞாயி றன்ன வசையில் சிறப்பும்" பொதுவாக

வுடையன். சிறப்பாக, பகைவர் தேயம் சேணிகந் திருப்பினும், ஆண்டுச் சென்று அவர்தம் நாசிப்படையைக் கொன்று குவித்து, "புரைத்தோல் வரைப்பின் வேல்நிழற் புலவோர்க்குக்—கொடைக் கடன்" இறுக்கும் போராண்மை படைத்தவன்.

இவன் பலர் புறங்கண்டு அவர் அருங்கலம் கொணர்ந்ததும், "இடனின்றி இரந்தோர்க்கு இல்லென்றல் இழி" வெனக் கருதி வரையாது வீசும் வள்ளன்மையும் புலவர் பாடும் பொன்றாப் புகழை இவனுக்குத் தந்தன எனல் வேண்டும். இவனிடத்தில் எண்ணில் அடங்கா யானைகளும் தேர்களும் இருந்தன என்பது "சூழியானைச் "சுடர்ப்பூண் நன்னன்" என்றும், "கறையடி யானை நன்னன்" என்றும், "இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்ப் பாரத்துத் தலைவன் ஆர நன்னன்" என்றும், "இயல்தேர் நன்னன்" என்றும் வருவனவற்றால் உணரப்படுகின்றது. செம்மையில் திறம்பல் இல்லாத செம்மொழி யுடையராய்ப் பாடிப் பரிசில் வேண்டி வருபவர்க்குத் தான் பகைப்புலத்துக் கவர்ந்த அருங்கலங்களைத் தனக்கென ஓம்பாது, ஓம்புதலையும் ஆராயாது, கொடுக்கும் இவனது கொடை, ஆசிரியர் மாமூலனார்,

"ஞெமன்ன்
தெரிகோ லன்ன செயிர்தீர் செம்மொழி
உலைந்த ஒக்கல் பாடுநர் செலினே,
உரன்மலி யுள்ளமொடு முனைபா ழாக
அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
சூழாது சுரக்கும் நன்னன்" (அகம். 349) என்று

கூறுதலால் விளங்குகின்றது. இவன் நாட்டுப் பாழிச்சிலம்பு, கொண்கானமலை, எழிற்குன்றம் முதலியன பெருந்தேன் தூங்கும் நெடுவரைகளாதலின், இவன் இருக்கையிற் கள்ளுண்டு மகிழ்தல் மிக்கிருந்தது. அது "இன்களி நறவின் இயல்தேர் நன்னன்" எனவும், "நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்" எனவும் வருவனவற்றால் அறிக. இவன் பல அரசர்களை வென்று புறங்கண்ட மேம்பாடுடையன் என்பது,

"பொறிப்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்த ரோட்டிய எத்துவேல் நன்னன்" என வருத லாலும் உணரலாம்.

இவன் காலத்தில், "நாண்மங்கலம்" என ஆசிரியர் ஐயனரிதனாற் கூறப்பெறும் பிறந்த நாட் கொண்டாட்டம் நிகழ்ந்தது. இந்நாண்மங்கலம் ஆசிரியர் தொல்காப்பியனாரால்,

"சிறந்த நாளணி செற்ற நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங்கலம்" எனக் கூறப்

பெறுகின்றது. இக்காலத்தில், அரசர்கள் வெள்ளிய உடையணிந்து செற்றம் நீக்கி அருளே நிறைந்த மனமுடையவராய்ச் சிறைவிடுதல், செருவொழிதல், கொலையொழிதல், இறை தவிர்தல், தானம் செய்தல், வேண்டின கொடுத்தலாகிய, சிறந்த தொழில்களையே செய்வர். இவ்வாறு கிள்ளி ஒருவன் (இச் சோழன் பெயர் தெரிந்திலது.) தான் பிறந்த நாளாய இரேவதி நாள் விழவயர்ந்த செய்தி,

"அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போன் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு" எனவரும் முத்தொள்

ளாயிரச் செய்யுளாற் றெரிகின்றது. * இவ்வழக்கம் இந் நன்னன் காலத்தும் நடைபெற்றதென மதுரைக்காஞ்சி யென்னும் ஒரு சிறந்த பாட்டு கூறுகின்றது. அது

"பேரிசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்
சேரி விழவின் ஆர்ப்பெழுந்தாங்கு" என வருவதாம்.

இனி, நன்னன் மேற்கூறிய வண்ணம் சிறப்பும் செல்வமும் ஓங்க ஆளும் திருவுடையனா யிருந்ததோடு புலமைமிக்கானா யிருந்தமை, ஏனைப் புலவர்களை யாதரித்தும் அவர் வேண்டும் பரிசில் அளித்தும் வந்தமையால் விளங்குகின்றது. ஏனெனில் "புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம்" என்பர் முன்றுறையரையர்.

---

* இவ்வழக்கம் 12, 13 ஆம் நூற்றாண்டிலும் நடைபெற்றதென அக்காலத்துப் பராந்தக தேவபாண்டியன் என்பானது கல்வெட்டினால் தெரிகிறது. Vide Travancore Archeological Series, Vol, 1 p. 22.

இங்ஙனம், புலமையும், புலமைக்கேற்ற வள்ளன்மையும், அதற்கேற்ற அருளுடைமையும், சுற்றத்திடத்து அன்பும் பிறவுமாய, மக்களின் நல்வாழ்விற்கு இன்றியமையாச் சிறப்புக் குணங்கள் பலவற்றையும் உடையனுயிருந்ததோடு சேர்ந்தாரைக் கொல்லும் சினமும் மிகக் கொண்டிருந்தான். அதனால் இவன் வழிவந்தோர்க்கும் பழியொன்று நிலைபெறுவதாயிற்று. இவனது நாட்டில், யாற்றில் நீராடுதற்குச் சென்றாள் ஒருபெண், அவ்வியாற்று நீரில் மிதந்து போந்த முற்றும் பழுக்காத பசுங் காய் ஒன்று கண்டு எடுத்து உண்டொழிந்தாள். அதனை யுண்ணல் வேண்டும் என்பது நன்னனது வேட்கைபோலும். அன்றி அது அவனது பொழில் பயந்தது போலும். அக்காய் இங்ஙனம் யாது காரணத்தாலோ யாற்றில் வீழ்ந்துவர இப் பெண் உண்டற்குரியதாயிற்று. இதனை இவன் ஆராயாது, அக்காயை அவளுண்டதை யறிந்து, அக்குற்றம் நோக்கி, அவளைக் கொலைசெய்யத் துணிந்தான். இதனையுணர்ந்த அப் பெண்ணின் தந்தை, அக்குற்றத்திடாக எண்பத்தொரு களிறு களையும், அப்பெண்ணின் நிறையளவு தூய பொன்னாற் செய்த பாவையையும் கொடுத்தான். கொடுப்பவும் கொள்ளானாய் ஆறாச் சினங்கொண்ட நன்னன் அப்பெண்ணைத் தான் கருதிய வண்ணம் கொலையே புரிந்தனன். இவனது புகழை நிலைபெறச் செய்து பலபடப் பாராட்டிய புலவர் பெருமகனாை பரணர், இவனது இத் தீச் செயலையும் விளக்கிக் கூறியுள்ளார். அது,

"மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் றப்பிற் (கு)
ஒன்பதிற் றொன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீஇயரோ அன்னை
ஒருநாள், நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே" எனவரும்

குறுந்தொகைப் பாட்டின்கண் கூறப்பெறுகின்றது.

இது நிகழ்ந்த சின்னாட்களுள் ஒருநாள் ஔவையார் இவனிடம் சென்று அழகிய பாட்டுக்கள் பாடியும், அவற்றின்

ஆழ்ந்த சொற்பொருளின்பங்களை எடுத்துக் கூறியும் இவனை மகிழ்விக்க முயன்றனர். இவன் அவற்றைத் தன் செவியிற் கொள்ளாமலும், அவர்க்குப் பரிசிலொன்றும் நல்காமலும் விடுப்ப, மனத்தில் வெறுப்புக் கொண்டு, அவர், இவனை நோக்கி,

"இருள்தீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயும் அன்றுநின் குற்றம்—மருள்தீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனவிரண்டு
ஓட்டைச் செவியும் உள." எனப்பாடிச் சென்றனர் *

† இவையே, பின்னர், ஒருகால் இளங்கண்டீரக்கோ என்பவனும் இளவிச்சிக்கோ என்பவனும் ஒருங்கிருந்தவழிப் பெருந்தலைச் சாத்தனர் என்னும் புலவர் பெருமான் சென்று அவருள் இளங்கண்டீரக்கோவைப் புல்லி, இளவிச்சிக்கோவைப் புல்லாராயினர். அது கண்ட விச்சிக்கோ, "என்னை என் செயப் புல்லீராயினீர்" என்று வினவ, அவற்கு அவர், "நீ பெலங்கேதர் நன்னன் மருகன் அன்றியும் வயங்குமொழிப் பாடுநர்க் கடைத்த கதவு காரணமாக எமர் வரைந்தனர்" என்று கூறிவிடுதற்குக் காரணமா யிருந்தன என்று தோன்றுகின்றது. இதன்கண் நன்னனது தீச்செயல் நினைவுறுத்தப்படுதல் காண்க.

மேலும், இச்செயல் புலவர் பலர்க்கு வெறுப்பை இவன் மாட்டு உண்டாக்கினமையும் இதனாற் பெறப்படுகின்றது. படினும், ஆசிரியர் பரணர் முதலிய சான்றோர் சிலர், "அரிய கற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்—இன்மை அரிதே வெளிறு" என்னும் பொய்யா மொழியையும், "குணங்குற்றங் களுள் ஒன்றேயுடையார் உலகத்" தில்லர் என்னுங் கொள்கையையு முடையராய் இவன் மாட்டுக் காணப்பெறும் குணம் நாடி, குற்றமும் நாடி அவற்றுள் இச்செயல் இவனது குணம் நோக்க மாணச் சிறிதெனத் தேர்ந்து இவனைப் பாராட்டுவாராயினர்.

அற்றேல் இக்கொடுஞ்செயலைப் பரணர் கூறியதற்குக் காரணம் யாதாம் எனின், இதுபற்றி வெறுப்புற்ற சான்றோர்

---

* தமிழ் நாவலர் சரிதை. இச்செய்யுள் இவனைக் குறிக்கின்றமை ஆராய்ச்சிக் குரியதொன்று.

இவனது வரலாற்றினைப் பிற்காலத்தார் உணர்ந்து கோடற் கேற்ற குறிப்புக்களைச் செய்யாராகப் பழுமரம் உள்ளிப் பழுத்தேர் வாழ்க்கைப் பறவை படர்தல்போல் பரிசிலர் பலர் இவனை யுள்ளி வருதலும், வருவார்க்கு இவன் வரையாது கொடுக்கும் வள்ளன்மையும், பகைவர் பலர் புறங்கண்டு வென்ற வென்றிச் சிறப்பும் வழிவருவார்க்குப் பெரிதும் பயன் தருவன வாம் எனும் நோக்கத்துடன், இவன் வரலாற்றுக் குறிப்பினுள் இதனையும் ஒன்றாகக் கூறினர் போலும் என்று கோடல் ஒருவாறு பொருந்துவதாம்.

இனி, இவனது போர்ச்செயல்களை யாராய்வாம். மேற் கூறிய செய்தியில் இவன் ஒருகால் கொண்ட வஞ்சினம், தொழிலால் முற்றுப்பெருங்காறும், அது தனியான் எனப் பெறப்படுவது கொண்டே, இவன் தன்னை யெதிர்த்தாரை எங்ஙனம் வென்றிருப்பான் என்பது நன்கு விளங்கும். உய்த் துணர்வது சொல்லில்வழி யாதலின், அதனை விரியக் கூறு கின்றும்.

இவன் அரசுரிமை யெய்திய காலத்து இவனது கொண்கான நாட்டின் புறத்தே சில குறுநிலமன்னர்கள் ஆண்டுவந்தனர். அவர்களுட் பெரும்பாலார் முடியுடைவேந்தருட் சேர மன்னர் தம் ஆணைவழிநிற்போ ராவர். அவருள் பிண்டன், அதிகன் என்போர் சிறந்தோராவர். இவருட் பிண்டன் என்பான் மிக்க மெய்வலி யுடையவன். இதுபற்றியே இவன் பரணரால் "மொய்ம்மூசு பிண்டன்" எனச் சிறப்பிக்கப் படுகின்றான். அதிகன் என்பான் பாண்டியன் ஆணைவழி நிற்கும் குறுநில மன்னன். அதனால் இவன் அதிகன் பசும்பூட் பாண்டியன் என்றும் வழங்கப் பெற்றான். இங்ஙன் ஒரு பேரரசன் பெயரே அவன்கி ழாண்ட சிற்றரசரும், தண்டத் தலைவரும் பெற்றிருத்தல் கல்வெட்டாராய்வார்க்குப் புதுமையாகாது. இவன் போர்த் தொழிலில் மிக்க வன்மை யுடையவன்; நல்லிசை தரும் இரவலர்க்குப் பெரும் பொருள் அளித்து அழியாப் புகழ் பெற்றவன்; வில்லேந்திய படைவீரர் பலர் கொண்டவன். இது

“பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்” என்றும், “வாய்மொழி நல்லிசை தரூஉம் இரவலர்க்கு உள்ளிய நசை பிழைப்பறியாக் கழல்தொடி அதிகன் * * * வில்கெழு தானைப் பசும்பூட் பாண்டியன்” என்றும் குறுந்தொகையிலும் நற்றிணையிலும் ஆசிரியர் பரணரால் புகழப் பெறுகின்றான். இவனது நாடு புள்ளுநாடு என்று முன்னர்க் கூறினும். நன்னன் இந்த அதிகன், பிண்டன் முதலானோரை வென்று பெரும்பொருள் கொண்டதோடமையாது அப்பொருள்களை அவர் நாட்டு யானை மீதேற்றி அவர்தம் மகளிர் கூந்தலால் கயிறுதிரித்துப் பிணித்துக் கொணர்ந்து தனது மிக்க காவல் செறிந்த பாழி யென்னும் நகரின்கண், தன் சுற்றமாய வேளிர் பலர் காப்ப வைத்தனன். இப்போர் வாகைப் பறந்தலை யென்னுமிடத்தில் நிகழ்ந்தது. இவ்வெற்றி கேட்ட *கொங்கர் மிக்க மகிழ்ச்சி கொண்டார்த்தனர். இச்செய்தி,

“மொய்ம்மூசு பிண்ட
னொன்முரணுடையக் கடந்த வென்வேல்
இசைநல் லீகைக் களிறுவீசு வண்மகிழ்ப்
பாரத்துத் தலைவ னார நன்னன்” (அ. 152) என்றும்,

“புள்ளிற் கேம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை அதிகற் கொன்றுவந்(து)
ஒள்வா ளமலை யாடிய ஞாட்பு” (அ. 142) என்றும்,

“கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே”
(குறு. 393) என்றும்,

“பொற்புடை
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்த ரோட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சி.” (நற். 270) என்றும்,

---

* கொங்கர்: கொங்குநாட்டு மக்கள். இந்நாடும் நன்னனுக்குரியதே. மற்று, கொண்கானநாடு வேறு, இக் கொங்குநாடு வேறு. Vide Footnote கொண்கானநாடு.

"பொலம்பூண் நன்னன் புள்ளுநாடு கடிந்தென"
(அக. 396) என்றும்,

"அருந்தெறல் மரபின் கடவுள் காப்பப்
பெருந்தேன் றூங்கு நாடுகாண் நனந்தலை
அணங்குடை வரைப்பிற் பாழி யாங்கண்
வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த
அருங்கல வெறுக்கை" (அகம். 396) என்றும்,

"நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்." (அகம். 258) என்றும்,

பரணர் ஒருவராலே பாடப்பெற்று வருவனவற்றால் அறியப் படுகின்றது. இனியும், நன்னன் வேறுபல குறுநில மன்னர்களை வென்று கவர்ந்து கொணர்ந்த பொருளைப் பரிசிலர்க்கு வழங் கினமை, முன்னரே கூறினோம்.

இவன் காலத்தும், அதற்குச் சிறிது முன்னும் வடநாட்டி னின்றும் நம்நாடு போந்து துளுநாட்டினையும், செல்லூர், நல்லூர் முதலிய ஊர்களையும் தமவாக்கி வாழ்ந்த கோசர்களை வென்று, அவர்தம் காவல் மரமான மாமரம் ஒன்றைத் தடிந்து தன் வெற்றி மேம்படச் செய்ததுமன்றி, அக் கோசரையும் வேறு நாட்டிற் போக்கினன். இதனை ஆசிரியர் பரணர், *"நன்னன் நறுமா கொன்று நாட்டிற் போக்கிய ஒன்றுமொழிக் கோசர்" எனக் குறுந்தொகையின்கட் கூறுகின்றார்.

* நன்னன்......கோசர் என்பதற்கு "நன்னனது சிறந்த யானையைக் கொன்று அவனது நாட்டிற் போகவிட்ட வாய்மைபொருந்திய சொல்லினை யுடைய கோசர்" என்று அதன் உரையாளர் கூறுகின்றார். நறுமா என்றற்கு யானையெனப் பொருள் கோடலாகாமையாலும், கொன்ற யானையைமீட்டும் நாட்டின்கட் போக்குதல் ஆகாமையாலும், கோசர்கள் படைப்பயிற்சிக்கும் வாய்மைக்கும் சிறப்புடையரெனலேயன்றி இன்னோ ரன்னசெயல் செய்துளரெனற்குச் சான்றின்மையாலும், யாம் கூறிய பொருளையேற்றலாற் கவியின்பொருள் சிறத்தலேயன்றி இழுக்காமை யாலும் அது பொருளன்மையுணர்க. மற்று உரையாளர் உரையினை அடிப்படையாகக்கொண்டு திரு. S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் துளுநாடு அல்லது கொண்கானநாடு நன்னனது நாடாமெனவும், அவன்

இங்ஙனம் செல்லுமிடமெல்லாம் தன் வென்றியே விளங்கச் செய்த நன்னனுக்குத் தோழராகச் சில குறுநிலமன்னர் இருந்தனர். அவர் ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை, முதலியோராவர். இவர்கள் ஒருங்கு கூடிக் கழுமலத்தில் அக்காலத்து விளங்கிய சோழன் பெரும்பூட்சென்னியை அவனது நகரருகே எதிர்த்தனர். இவருள் ஏற்றை, அத்தி, கங்கன் புன்றுறை ஆகிய இவர்கள் புலவர் கூறும் பேறு பெற்றிலர். கட்டி யென்பான் ஒருகால் உறையூரின்கட் சிறப்புற் றோங்கிய * தித்தன் வெளியன் என்பானோடு பொரற்கெனப் பெரும்படை கொண்டு சென்று, அத்தித்தனது நாளவையின்கண் எழுகின்ற கிணைப்பாடு கேட்டு அஞ்சிப் பொராது ஓடினன் என்று ஆசிரியர் பரணர் கூறுகின்றார். அது,

"தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅ தோடிய ஆர்ப்பினும் பெரிதே (அகம். 226)
(நீ வெய்யோளொடு முன்னா ளாடிய கௌவை)"

என்பது. எற்றை முதலானோருடன் நன்னன் சென்னியை யெதிர்த்தகாலை, அவனது படைத்தலைவனான பழையன் என்பான் முதற்கட் போரிற் பட்டனன். கண்ட சென்னி பொருனாய் இவர்களை யடர்த்து வென்றிகொண்டதே யன்றி

வம்பவடுகரான கோசரொடுபொருது, தன் பட்டத்து யானையை யிழந்ததோடு, பெருந்தோல்வியடைந்தான் எனவும் கூறுகின்றார். (Beginnings of South Indian History pp. 84-85.) இதனை மறுத்து, திரு. P. T. சீனிவாசய்யங்கார் அவர்கள், "நன்னனது நறிய மாமரத்தினைக்கொன்று தம் நாட்டிற்குக் கொண்டுசென்ற கோசர்போல வன்கட் சூழ்ச்சியும் வேண்டும்" என்று கூறினர். (History of the Tamils. pp. 521,2. Footnote 57.) வன்கட் சூழ்ச்சிசெய்து கவர்ந்தது "நறுமா" வேயாயின் அது அவனது காவன்மரமாதல் வேண்டுமாகலானும், "பொலந்தேர் நன்னன் சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த" எனவும், "அவன் பொன்படுவாகை முழுமுதல் தடிந்து" எனவும் பதிற்றுப் பத்துக்கூறுதலின் அவனது காவல்மரம் வாகையாதலினாலும் இதுவும் பொருளன்மை யுணர்க.

---

* வெளியன்: வெளியம் என்னும் ஊரினன்.

இவர் படைவீரருள் ஒருவனை கணையன் அகப்பட அவனைச் சிறைகொண்டு கழுமலத்தையும் உரிமை செய்துகொண்டு சென்றான். இங்குக் கூறிய கணையன் என்பானும் கட்டிபோலச் சிறந்த வீரமுடையவனல்லன். அவன் ஒருகால் தன்னொத்த பாணன் என்னும் வீர னொருவனுடன் கூடி, ஆரியப்பொருநன் என்ற மல்லன் ஒருவனுடன் மற்போர் செய்து தோல்வியுறத் தான் மிகநாணி மறைந்திருந்தான் என ஆசிரியர் பரணரே கூறு கின்றார். அது,

"பாணன்
மல்லடு மார்பின் வலியுற வருந்தி
யெதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருந
னிறைத்திரள் முழவுத்தோள் கையகத் தொழிந்த
திறன்வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணியங்கு மறையினள்." (அகம். 386)

என்பது. இவற்றால், போர்வலிமிக்க நன்னன் அஃதில்லாத ஏனை எற்றை முதலானோரோடு கூடிப் பொருது தோற்றசெய்தியைக் குடவாயிற் கீரத்தனார்,

"நன்னன் எற்றை நறும்பூண் அத்தி
துன்னரும் கடுந்திறற் கங்கன் கட்டி
பொன்னணி வல்விற் புன்றுறை யென்றாங்கு
அன்றவர் குழீஇய வளப்பருங் கட்டூர்ப் *
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனா னாகித் திண்டேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி" (அகம்.44)

என்று பாடுகின்றார்.

இனி, இவனது வெற்றிக்கெல்லாம் சிறந்த காரணமாக விளங்கிய தானைத் தலைவன் மிஞிலி யென்பவன். அவன் நன்னனது பாழி, பாரம் முதலிய நகரங்களை நலம்பெற ஆட்சிசெய்து வந்தான். நன்னனது வரலாற்றின் பிற்பகுதிக்கு இம் மிஞிலியின் வரலாறு இன்றியமையாமையி னீண்டுக் கூறுகின்றோம். (தொடரும்)

* கட்டூர்—பாடிவீடு.

குமர குருபர அடிகளும் அவர் நூல்களும்.

திரு. இ. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக் கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 336-வது பக்கம்.)

"சீர், தரு, மாசிலாமணியைத்தான்" எனவும்

"அருடாழ் சடிலத், தானுவ னுகம் பெரு மாசிலாமணிச் [சம்பந்தனே" எனவும்.

தமிழ்ப் பெருங்கூடல்,
வண்பதி புரக்கு மாசிலாமணி" எனவும்

"கண்ணிற் கனியாங் கதிர் மாசிலாமணியைப்
பண்ணிற் கனியாப் பகர்வரால்" எனவும்

"அருள், மன்வசமாகச் செயுமாசிலாமணி மாமணிக்கு" எனவும்

"பாசமா மிருட்கோர் படர்மணி விளக்கெனு
மாசிலா மணித் தேசிக ராய" எனவும்

"தன்செய லாயவெல்லா மாசிலாமணிச் சம்பந்த" எ-ம்

"ஆசிலா வண்புகழ் அணிநிலா வெறிக்கு
மாசிலா மணி ஞான சம்பந்த" எனவும்

"ஆரூரே யூர்பே ரருண் மாசிலாமணி" எனவும்

"ஐந்தவித்தோர்,
சூளாமணி மெய்ச்சுடர் மாசிலாமணி சூழ்ந்திடினே" எனவும்

"தேசுலாங் கமலைத் திருநகர் புரக்கு
மாசிலாமணி ஞான சம்பந்த" எனவும்

"பின்னம் படைத்த சமயவிரோதப் பிணக்கறுத்தோர்
சின்னம் படைத்த முனிமாசி லாமணி" எனவும்

"காசுலாம் பசும்பொற் கடிமதிற் கமலை
மாசிலா மணி ஞான சம்பந்தன்" எனவும்

"ஒண்மணிச் சூட்டு,
அம்மாசுணந் தள்ளியம் முடிமேற் கொண்டிருந்த
இம்மாசிலாமணிமற் றின்று" எனவும்

'இன்றோர் வியப்புளதான் மாசிலாமணி யென்றிருப்பது'

"மன்றலம் பணைசூழ் மருதவேலிப்,
பொன்மதிற் கமலை நன்னகர் புரக்குந்
தேசிக ராய சிற்பர முதல்வ
மாசிலாமணி ஞான சம்பந்த
எனையாட் கொள்ள வந்தெய்தினை யாகலின்
முனியா தோன்றிது மொழிகுவன்" கேண்மதி எனவும்

"குருமாசிலா மணியைக் கொள்வோர்" எனவும்.

"தருமணிக் கோவைத் தருஞானசம்பந்தன் றண்கமலைக்
குருமணிக் கோவை நிகர் மாசிலாமணி" எனவும்

அடிகள் கனிந்து பாடலால் மாசிலாமணிப் பெருந்தகையாரையே அருட் குரவனுக்கொண்டப் பெரியாருரைக்கு முபதேசமொழிகளை யேற்றுக் காசி முதலிய பதிகளிற் சென்று அறநிலை தழைக்கச் செய்தனராவரென்பதே தேற்றமாம். ஆகவே பிள்ளையவர்கள் கூற்றுக்குச் சிறிதுமாதரவேயின்றென விடுக்கவேண்டுவதாயிற்று.

மேலும் அடிகளால் நூற்சிறப்பு என மூன்று செய்யுள்கள் நூலிறுதியில் யாக்கப்பட்டுள்ளன. அவைகளையுங் கண்டுகளிப்பராக.

மும்மணிக்கோவை பாடிய பின்னர் நான் மணிமாலை பாடினதாக வரலாறு காணப்படுகின்றது, பிள்ளையவர்கள் கூறுஞ் சரிதத்தின்கண்,

"ஒருகோ லோச்சி யிருநிலம் புரப்பான்
றிசைதிசை யுருட்டுந் திகிரியன் சென்று
முசுகுந் தனுக்கு முன்னின் றுங்குப்
பொன்னுலகிழிந்து புடவியிற் றோன்றி
மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென" எனு

மடிகளை கொண்டு, திருத்தருமபுரம்விட்டுப் பங்குனி யுத்தரங் காணும் பேரவாவொடு திருவாரூர்ப்புக்கு தியாகராசப்பெருமானைப் பணிந்து பாடினர் எனக்கொண்டுள்ளார் போலும். பிள்ளையவர்கள் மாசிலாமணியெனும் பெயருடையவர் அடிகளார் காலத்தில்லையென்று பாடியிருப்பாராயின் இவ்விடுக்கண் டலைப் படாவே. அடிகள் திருவாரூரின்கண்ணும் தில்லையின்கண்ணும் சில மதவாதியரொடு மறுத்துரைசெய்து வென்றனர் எனச் சொல்வது பொருத்தமாகக் காணப்படவில்லை. அதற்குப்போதிய வாதாரவுமில்லை. பிள்ளைப்பெருமா ளையங்காரொடு வாதிட்டது போலவே யிதனையும் பாடியிருக்கவேண்டும். இப்படியாகவே அடிகள் காசிப் பதியடைந்து அவ்விடத்துக் காசித் துண்டிக் களிற்று விநாயகர்பதிகம் பாடினதாகச் சாற்றுதலும் மேற்கூறியாங்கே வெறுங் கூற்றே யாம். இவர் பரம்பரையின ராகிய குமர குருபரர் ஒருவரே இந்நூல் பாடியுள்ளார் ஆகலின், இவைகளனைத்தும் வாரம்பற்றியே நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்பதே இவ்வாய்வின் முடிவாகும்.

இனிக் குமர குருபரவடிகள் அருளிய நூல்களைப்பற்றி யாராய்வாம்.

உடல்இயலும் உடல்நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B. A., L. T.,

(முற்றொடர்ச்சி 254-வது பக்கம்.)

சேர்க்கை I

உடற்பயிற்சிகள்.

குறிப்பு :—1. கீழ்க்கண்ட பயிற்சிகள் ஒருகாசு செலவு இல்லாமல், விளையாட்டுக் கலன்களை (Sports materials) வாங்காமல், பெரிய விளையாட்டிடம் (Sports Ground) தயாரிக்காமல் செய்து அரும்பயனை அடையக் கூடியன.

2. இவை வெளியுறுப்புகளன்றி உள்ளுறுப்புகளுக்குஞ் சிறந்த பயிற்சி தருவதால் உடலால் உழைத்து வருவோரும் செய்யவேண்டியனவே.

3. இவைகளைக் காலையில் எழுந்ததும் செய்தலே நன்று. அப்பொழுது பசியாயிருந்தால் இரண்டு மூன்று வாதம் பருப்பைத் தின்று நீராரத்தண்ணீர் அல்லது தண்ணீர் குடித்துச் செய்தல் நன்று. மாலையில் களைப்பாயில்லாவிடில் செய்யலாம். எண்ணெய் தேய்த்துக்கொள்ளுமுன் செய்யலாம்; ஆனால் நன்றாய்க் களைப்பாறியபின் (ஒருமணியாவது கழித்து) தேய்த்துக் கொள்ளவேண்டும்; தேய்த்துக் கொண்டபின் செய்யலாகாது.

4. இப் பயிற்சிகளைச் செய்யப் புகுவோர் தங்கள் உடலைக் கீழ்க்கண்ட விடங்களில் (சேர்க்கை II) அளந்து கொண்டு செய்தலே நன்று. பின் இரண்டு மூன்று திங்களுக்கொருமுறை அளந்து உண்டான வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்ப்பார்களே யாயின் அவர்களுக்கு ஊக்கமுண்டாகும்.

5. ஒவ்வொரு பயிற்சியையும் எத்தனை முறை செய்தால் போதுமென்பது ஆங்காங்கு குறிக்கப்பட்டிருக்கின்றது. பயிற்சி செய்யும் பழக்கமில்லாதோர் துவக்கத்தில் ஒவ்வொன்றையும் மும்முறை செய்தால்போதும். இவ்வாறு பத்துநாள்விடாது செய்தானபின் நந்நான்காக்கலாம். இவ்வாறு பத்து நாளேக்கு ஒன்ருக ஏற்றிக்கொண்டே போனல் கெடுதல் நேராது. பயிற்சி செய்துகொண்டிருக்கையில் களைப்புறின் அல்லது மூச்சுவாங்கின் நிறுத்தலே நன்று.

6. ஒவ்வொரு பயிற்சியையும் செய்யப்புகுமுன் நேராய் நின்று இடுப்பில் கையை வைத்துக்கொண்டு முழு மூச்சு † விட வேண்டு; பின் இருகைகளேயும் இருபுறமும் நேராய் நீட்டி முழு மூச்சுவிடவேண்டும். இவ்விரண்டையும் மும்முறை மாற்றி மாற்றி செய்தல்வேண்டும். பயிற்சி செய்யும்போது கதவு பல கணிகளேத் திறந்துவைத்துக் கொள்ளவேண்டு மென்பது கட்டாயம். திறந்த வெளியில் செய்வது மிகநன்று.

7. ஒவ்வொரு பயிற்சிக்கும் இடையே உடலைக் கையா லாவது முரட்டுத் துண்டாலாவது அழுத்தித் தேய்த்துக் கொள்ளல் நன்று. இதனல் குருதியோட்டம் மிகும்; தோல் வலுவடையும். ஆனல் எங்கு தேய்த்தாலும் குருதியேற்றத்தை நோக்கித் தேய்க்க வேண்டும். வேர்த்திருக்கும் போது துண்டால் தேய்த்தல் எளிது.

8. ஒவ்வொரு பயிற்சியாலும் இன்னின்ன உறுப்பிற்கு நலம் உண்டென்று குறிக்கப்பட்டிருக்கிறது. எவ்வுறுப்பு வலுவடைய வேண்டுமோ அதற்குத் தக்க பயிற்சியைப் பொறுக்கிச் செய்தல் நலம். முதல் பன்னிரண்டு பயிற்சியாவது யாவரும் செய்யப் பழகுதல் வேண்டும். அவைகளால் எல்லா உறுப்புகளும் வலுவடையும்.

9. ஒவ்வொரு பயிற்சி செய்யும்போதும் எவ்வளவு உள்ளத்தை அவ்வுறுப்பிற் செலுத்தி மெதுவாகச் செய்யக் கூடுமோ அவ்வளவிற்குப் பயன் மிகுதி. இன்னும் நம் உள்ளத்

† இதைச்செய்யும் வழியை மூச்சுறுப்புப்படலத்தில் பார்.

தாலேயே எதிர்ப்பு உண்டாக்கிக்கொண்டு முயன்றுசெய்வது உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒருங்கே வலுவை மிகப்படுத்தும். அதாவது எளிதாக உடற்பங்குகளை இயக்கிவிடாது நம் உள்ளத்தாலேயே எதிரியக்கத்தையும் உண்டாக்கிக்கொண்டு அதை மீறிச் செய்வதுபோல் செய்தல் வேண்டும். இவ்வெதிர்ப்பு மிக மிகப் பயிற்சியும் மிகுதியே.

10. பயிற்சிசெய்ய உடலை இயக்கும்போது மூச்சை அடக்காது இயக்கத்திற்குத் தக்கபடி விட்டோ இழுத்தோ செய்தல் நன்று. இவ்வாறு இயற்கையாய் மூச்சுவிட வேண்டிய வழியும் ஆங்காங்குக் குறிக்கப்பட்டுள்ளது.

அ

பயிற்சி :—

I. நேராக நின்றுகொண்டு தலையை வலமாகச் சுழற்று; பின் இடமாகச் சுழற்று. [புறத்திற்குப் பத்துமுறைசெய்; மூச்சை வேண்டியபடி விட்டுக்கொள். இதனால் கழுத்திற்கும் மூளைக்கும் பயிற்சி.]

II. நிமிர்ந்து குதிகளைச் சேர்த்து நில். இருபுறங் கைகளையும் முதுகில் கூடியவரையில் உயரமாக வைத்துக்கொள். முதுகைத் தேய்த்துக்கொண்டே குதியைக் கிளப்பி, முழங்காலை விரித்து முன் காலில் உட்காரு; பின் தேய்த்துக் கொண்டே எழு. [பத்துமுறை செய், உட்காரும்போது மூச்சை விடு; எழுந்திருக்கும்போது இழு, குண்டிக்காய், கால்களுக்குப் பயிற்சி.]

III. முன்போல் நில். உடலை இடுப்புக்குமேல் (கீழ்ப்பங்கு விரைத்து நிற்கவேண்டும்) இடதுபுறமாக வளைத்துக்கொண்டே வலது விரல்களை மூடி வலது அக்குளிற்குக் கொண்டுபோ; இடது கையை முழங்காலுக்குக் கூடியவரை கீழே தொடச்செய். பின் நிமிர்ந்து வலது பக்கம் இவ்வாறே வளை. [புறத்திற்குப் பத்துமுறை; வளைக்கும்போது மூச்சுவிடு, நிமிரும்போது இழு. முள்ளந்தண்டிற்கும் விலாப்புறத் தசைகளுக்கும்.]

IV. காலை ஒரு அடி அகற்றிவை, கையைத் தலையோடு ஒட்டிமேலே நீட்டு. முழங்காலை வளைக்காது உடலை முன்னாக வளைத்து வந்து விரல்களால் நிலத்தைத்தொடு. கையைக் கூடியவரை தலைப்புறத்தைவிட்டு நீக்காதே. பின் நிமிர்ந்து உடலைப் பின்னாலும் கூடியவரை வளை. [பத்துமுறை. குனியும்போது விடு, நிமிரும்போது இழு, பின்னால் வளையும்போது விடு, முன்னால் வரும்போது இழு. முள்ளந்தண்டிற்கும் முதுகிற்கும் வயிற்றுத் தசைகளுக்கும். பழகப்பழக நிலத்தைக் கைப்பூட்டுகளால் தொட இயலும்.]

V. தண்டால் எடுக்கப் புகுவதுபோல், உடலைக் கைகளும் கால் விரல்களுந் தாங்கும்படி நேராகக் குப்புறப்படு. செங்குத்தாயிருக்குங் கைகளை முழங்கையில் மடக்கி உடலை நிலத்துடன் ஒட்டிக் கொண்டுவா; பின் முன் போலாகு. [பத்து முறை; கீழே போகும்போது இழு. கைக்குப் பயிற்சி.]

VI. நேராக நின்று கையை நேராக உயர்த்தித் தலைக்குமேல் விரல்களைப் பின்னிக்கொள். முழங்காலை வளைக்காது உடலை முன்னால் வளைத்து 'ட' ப்படக்கொண்டுவா. கையைத் தலையைவிட்டு விலக்காது வலப்புறமாக உடலைப் புறத்தும், பின்னும், முன்னுமாகச் சுழற்று, பின் இடப்புறமாகச்சுழற்று. [புறத்திற்கு ஐந்துமுறை; முன் வரும்போது இழு, பின் போகும்போது விடு. வயிற்றிலுள்ள உறுப்புக்கெல்லாம்.]

VII. நேராக நின்று வலக்காலை ஒரு முழம் முன்வைத்து அதை உடலின் பளுவைத் தாங்கும்படி செய்து இடக்காலை நேராக்கி அதன் குதியைக் கிளப்பி விரல்கள் நிலத்திற் படும்படிசெய். கைகளை நேராக நீட்டித் தலையை ஒட்டியும் உடலை ஒட்டியும் போம்படி விரைவாய்ச் சுழற்று. பின் அப்படியே திருப்பிச் சுழற்று. இவ்வாறே இடது காலை முன் வைத்துச்செய். [முன்புறம் பத்து, பின்புறம் பத்து; இருகால்களுக்கும் நாற்பது. இசைவுப்படி மூச்சைவிடு, கைகளுக்கும் தோள்களுக்கும், நெஞ்சுத்தசைகளுக்கும் பயிற்சி.] (தொடரும்.)